[17th December 1959

SRI A. GOVINDASAMY : மாஜி ராணுவத்தினருக்கு நிறைய உதவி அளிக்கப்படுவதாக கனம் அமைச்சர் குறிப்பிட்டார். தென்னார்காடு ஜில்லாவில் மாஜி ராணுவத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட பஸ் ரூட் கொடுக்கவேண்டியது நியாயமாக இருக்கும்போது அதை தனியாருக்கு வழங்கி இருக்கிறார்கள். அதைப்பற்றிய வழக்கு ஹைக்கோர்ட்டுக்கு வந்தது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : ஹைக்கோர்ட்டுக்குப் போகக் கூடியதாக இருப்பதால் நாம் அதில் நேரடி தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை.

Aid from U.S.A. for Higher Agricultural Education

* 239 *Q*.—**SRI A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைசச்ர் அவர்கள் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

விவசாய மேற்படிப்பிற்கு அமெரிக்கா அளித்திருக்கும் ரூ. 40 லட்சம் உதவியில் இந்த மாநிலத்திற்கு எந்தெந்த கல்லூரிக்கு எந்தப் பாடத்திட்டம் போதிக்க எவ்வளவு ரூபாய் உதவியளிக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It has been ascertained from the Indian Council of Agricultural Research, New Delhi, that during the last five years a number of agreements have been concluded between the Government of India and Technical Co-operation Mission for providing technical assistance to the Agricultural and Veterinary Colleges in India. However, no agreement for the specific amount of Rs. 40 lakhs referred to in the question has been concluded. The following are the institutions in this State which will benefit and the value of equipment and books approved for allotment :—

Name of the Institution.	*Value.* $
1. Annamalai University, Chidambaram	7,812·00
2. Veterinary College, Madras	90,304·00
3. Agricultural College and Research Institute, Coimbatore	73,612·00
4. Institute of Veterinary Preventive Medicines, Ranipet	794·00
Total ...	172,522·00
	or Rs. 8,19,479·50 nP.

SRI A. VEDARATHNAM : இந்த உதவியின் மீது எந்தக் கல்லூரிகளில் என்ன பாடத் திட்டம் மேல் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து அறிவிக்க முடியுமா ?

17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாய இலாகா வைப்பற்றியும் கால்நடை இலாகாவைப்பற்றியும்தான் அந்தப் பாடம்.

SRI A. VEDARATHNAM : இங்கேயிருந்து மேல் படிப்புக்கு போக விரும்பும் மாணவர்களுக்கு இந்த நாட்டிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியுமா? அதற்கு இதில் ஏதாகிலும் வழி உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடைக் கல்லூரி யிலும் விவசாயக் கல்லூரியிலும் போஸ்ட் கிராடுவேட் கோர்ஸ் இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் ஸ்பெஷல் ஸ்டடிக்கு குறிப்பிட்ட திட்டத்திற்கு அனுப்புவதைப்பற்றி அது சம்பந்தமாக தனியாக கவனிக்கப்படும்.

SRI V. SANKARAN : மேற்படி கல்லூரிகளில் கொடுக்கப்படும் தொகை ரூபாய் அளவிலா அல்லது டாலர் அளவிலோ என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டும் ஒன்று தான். டாலரைப் பற்றியும் ரூபாயைப் பற்றியும்தான். டாலராக இருந்தால் அதன் ரூபாய் மதிப்பில் கொடுக்கப்படுகிறது. டாலர் மதிப்புக்குச் சமமான ரூபாய் கொடுக்கப்படுகிறது.

SRI S. LAZAR : உதவி பணம் கொடுக்கப்படுகிறபோது கல்லூரி களில் உயர்ந்த படிப்புக்கு அதாவது ரிசர்ச், எம்.எஸ்.ஸி.-க்கு விவசாயக் கல்லூரிகளில் போகக்கூடியவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றும் தனியார் மூலமாக படிக்கக் கூடிய சலுகைகள் கொடுக்கப்படுவது இல்லை என்றும் அண்ணாமலை கலாசாலைக்கு சலுகை இல்லை என்றும் சொல்லப்பட்டது. இதை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாணவர்களுக்குக் கொடுப்பது இல்லை. அந்தந்த ஸ்தாபனக் கல்லூரிகளில் அவர் களுக்கு டெக்னிகல் அசிஸ்டெண்ட் படிக்க உதவி பெறவேண்டும் என்றுதான் சொன்னேன்.

Grant of loans to Industrialists

*240 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased ot state—

(a) the loans so far given to industrialists both for small scale as well as large scale industries;

(b) the amount of arrears to be realised till date;

(c) the number of defaulters and the amount; and

(d) the number of industrialists who have been given loans more than a lakh?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The loans so far given to industialists both for small scale as well as for large scale industries from 1948–49 to 1959–60 (up to July 1959) amount